# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com


சுற்றறிக்கை எண் 19/2011 நாள் : 08.09.2011

பெறுநர்
மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்
மத்திய அமைப்பின் அனைத்து கிளைச்செயலாளர்கள்
மத்திய அமைப்பின் அனைத்து செயற்குழு உறுப்பினர்கள்

அன்பார்ந்த தோழர்களே ! வணக்கம் !!

## 20.09.2011 மாலை நேர கவன ஈர்ப்பு தர்ணா

மத்திய அமைப்பின் மாநில பொதுக்குழுவின் அடிப்படையில் மின்வாரிய ஊழியர்களின் கீழ் கண்ட கோரிக்கைகளை முன்வைத்து 20.09.2011 அன்று மின்வாரிய தலைமை அலுவலகத்திலும் வட்ட தலைமை அலுவலகத்திலும் மாலை நேர கவன ஈர்ப்பு தர்ணாவை நடத்துவதற்கான தயாரிப்பில் கிளைகள் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வந்துகொண்டுள்ளன. அந்த அடிப்படையில் திட்டமிட்டவாறு இந்த தர்ணாவை வெற்றிகரமாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம். ஆட்சி மாற்றத்திற்கு பின்னர் நாம் நடத்தும் முதல் இயக்கம் என்பதை கவனத்தில் கொண்டு அரசின் கவனம் மத்திய அமைப்பின் பால் திரும்புகின்ற வகையில் இந்த தர்ணாவை நடத்திட வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம். இத்தர்ணா போராட்டத்தில் மாநில, மாவட்ட சி.ஐ.டி.யு தலைவர்களை ஈடுபடுத்தி நடத்திட வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

### கோரிக்கைகள்:-

1) தரமான மின்சாரத்தை தடையின்றி வழங்கிடுக
2) மின்வாரிய பிரிப்பை மறுபரிசீலனை செய்திடுக
3) மின்வாரிய ஊழியர்களுக்கு 01.12.2011 முதல் ஊதிய உயர்வு வழங்கிடுக
4) காலியிடங்களை நிரப்பி மக்கள் சேவையை மேம்படுத்துக
5) கணக்கீட்டு பிரிவு ஊழியர்களுக்கு நிபந்தனைகளை அகற்றி பதவி உயர்வு அளித்திடுக
6) எல்லா பிரிவுகளுக்கும் சிறப்புநிலை முகவர் பதவி உயர்வு அளித்திடுக
7) மஸ்தூர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்கிடுக
8) ஒப்பந்த ஊழியர்களை அடையாளம் கண்டு பணிநரந்தரம் செய்திடுக
9) அனல், புனல், சிவில், பொதுகட்டுமான ஊழியர்களுக்கு உடனடியாக பதவி உயர்வு அளித்திடுக
10) புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்திடுக
11) சிவில் டிப்ளமோ முடித்தவர்களுக்கும் பதவி உயர்வு அளித்திடுக

இயக்கம் நடைபெற்ற பின்னர், நடைபெற்ற இயக்கங்கள் பற்றிய விவரங்களை உடனடியாக மாநில மையத்திற்கு எழுதி அனுப்பி வைக்க வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

## பகுதி நேர ஊழியர்களின் பணிநிரந்தரம்

மின்வாரியத்தில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கு சத்துணவு ஊழியர்களுக்கான ஊதியத்தை வழங்க வேண்டும் என்று வாரியம் பிறப்பித்த உத்தரவினை கடந்த 13 ஆண்டுகளாக மின்ஊழியர் மத்திய அமைப்பு நடத்திய போராட்டம் முடிவுக்கு வரும் நிலையில் உள்ளது. பகுதி நேர ஊழியர்களை நிரந்தரப்படுத்துகின்ற உத்தரவை உடனடியாக வழங்கிட வேண்டுமென்றும் அதற்கான ஊதியத்தை அக்டோபர் மாதத்தில் வழங்கிடவும், நிலுவைத்தொகையில் 50 சதவீதத்தை அக்டோபர் மாதத்தில் வழங்கிடவும் மீதமுள்ள 50 சதவீதத்தை ஏப்ரல் 2012 இல் வழங்கிடவும், மேலும் ஊதியம் கணக்கிடும் போது அரசு போட்ட உத்தரவுகளான 4/2005 லும் 9/2006 லும் வழங்கிய ஊதிய உயர்வையும் கணக்கிட்டு வழங்கிட வாரிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவின் நகலையும் 4/2005லும், 9/2006 லும் சத்துணவு ஊழியர்களுக்கு ஊதியத்தை உயர்த்தி கொடுத்த அரசின் உத்தரவின் நகலையும் இவைகளை பொறுத்தி சம்பள நிர்ணயம் எவ்வாறு செய்ய வேண்டும் என்று மத்திய அமைப்பு தயாரித்த கணக்கீட்டு தாளையும் இத்தோடு இணைத்துள்ளோம்.

கிளைச்செயலாளர்கள் இணைப்பில் கண்ட விபரங்களை கணக்கில் கொண்டு திட்ட மேற்பார்வை பொறியாளரை அணுகி நிரந்தரத்திற்கான உத்தரவையும், சம்பள பொருத்தம் செய்வதற்கும் வற்புறுத்துவதின் மூலமாக மட்டுமே இதை அமலபடுத்துவதில் வெற்றி காண முடியும். கிடைத்த விபரங்களை கொண்டு திட்ட நிர்வாகத்தை அணுகிட வேண்டுகிறோம். இத்தருணத்தை பயன்படுத்தி கிளைகள் விழிப்புனர்வோடு செயல்பட்டு அவர்களை நமது ஸ்தாபனமாக்குவதற்கும் மத்திய அமைப்பு நிர்ணயித்த நன்கொடையை வசூலிப்பதற்கும் அவசர நடவடிக்கை எடுக்க வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம். மேலும் இவ்வெற்றியை கொண்டாடுகிற வகையில் அக்டோபர் மாதம் 15 ஆம் தேதிக்குள் கிளைகள் வெற்றி விழாவாக கொண்டாடிட கேட்டுக்கொள்கிறோம்.

## புதிய பென்சன் திட்ட கருத்தரங்கு

மத்திய அரசால் அறிவிக்கப்பட்டு 01.04.2003 முதல் அமல்படுத்தப்பட்ட புதிய பென்சன் திட்டத்தால் ஊழியர்களுக்கு ஏற்பட உள்ள இழப்பை அவர்கள் மத்தியில் கொண்டு சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தி இந்த மோசடி பென்சன் திட்டத்தை திரும்பபெற அரசை வலியுறுத்தும் இயக்கத்திற்கு செல்ல வேண்டியுள்ளது. புதிய பென்சன் திட்டத்தால் ஊழியர்கள் இழக்க உள்ள உரிமைகளை விளக்குகின்ற கருத்தரங்கம் 15.11.2011 இல் சென்னையில் நடைபெற உள்ளது. அதில் அந்தந்த கிளையில் புதிய பென்சன் திட்டத்திற்கு உட்பட்டு இழப்பை சந்திக்கின்றவர்களை சென்னையில் திரட்ட வேண்டியுள்ளது. இதற்குன்டான கோட்டாக்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

## ஊதிய உயர்வு குழு கூட்டம்

01.12.2011 முதல் மின்வாரிய ஊழியர்களுக்கு வழங்கிட உள்ள ஊதிய உயர்வு சம்மந்தமாக மின்ஊழியர் மத்திய அமைப்பு சார்பாக கொடுக்கப்படவேண்டிய கோரிக்கை பட்டியலை தயாரிக்கின்ற ஊதிய உயர்வு கோரிக்கை தயாரிக்கும் குழுக்கூட்டம் 12.10.2011 இல் நடைபெற உள்ளது. இது சம்மந்தமாக கிளைகளில் ஆலோசனை இருக்குமானால் அவைகளை மாநில மையத்திற்கு ஊதிய உயர்வு ஆலோசனை என்ற தலைப்பின் கீழ் தனியாக அனுப்பி வைத்திட கேட்டுக்கொள்கிறோம்.

## இந்திய மின்ஊழியர் கூட்டமைப்பின் தென்மாநில கருத்தரங்கு

தேசி மின்சார பொறியாளர் மற்றும் ஊழியர்கள் கூட்டமைப்பின் செயல்பாடுகளை முறைப்படுத்துகின்ற வகையில் தேசிய மின்சார பொறியாளர் மற்றும் ஊழியர்களின் கூட்டமைப்பு சார்பாக மண்டல வாரியாக கருத்தரங்குள் நடத்துவதென்றும், அந்த கருத்தரங்கில் அகில இந்திய

அளவில் மின்வாரிய ஊழியர்களின் கோரிக்கைகளை முன் வைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. அந்த அடிப்படையில் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மாநிலங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்ற கருத்தரங்கை சென்னையில் 13.10.2011 அன்று நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தில் மின் ஊழியர் மத்திய அமைப்பு, தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம், பொறியாளர் அமைப்பு, பொறியாளர் கழகம், பொறியாளர் சங்கம், ஐ.என்.டி.யூ.சி, பி.எம்.எஸ் போன்ற சங்கங்களின் பிரதிநிதிகள் ஐந்து மாநிலங்களிலிருந்தும் கலந்து கொள்வதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. மத்திய அமைப்பை பொறுத்தவரையில் சென்னையில் உள்ள இரு மண்டலங்களிலும் தலா 150 தோழர்கள் கலந்து கொள்வதென்றும், வேலூர் மண்டலமும், விழுப்புரம் மண்டலமும் ஒரு திட்டத்திற்கு 20 தோழர்கள் கலந்து கொள்வதென்றும் மற்ற கிளைகளில் இருந்து ஒரு கிளைக்கு குறைந்த பட்சம் 5 தோழர்கள் கலந்து கொள்ள ஏற்பாடு செய்திட வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

## மத்திய தொழிற்சங்கங்கள், தொழில் வாரியான சம்மேளனங்களின் டெல்லி கருத்தரங்கு

5 அம்ச கோரிக்கைகளை வைத்து மத்திய தொழிற்சங்கங்கள் தொழில் வாரிய சம்மேளனங்களின் ஆர்ப்பாட்டத்திற்கு பின்னர் அடுத்த கட்ட இயக்கத்திற்கு திட்டமிடுகின்ற கருத்தரங்கு 7.9.2011 அன்று டெல்லியில் நடைபெற்று 8.11.2011 இல் சிறை நிரப்பும் போராட்டம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. டெல்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில துணைத் தலைவர்களில் ஒரு வரான தோழர்.எ.பழனி கலந்து கொண்டுள்ளார்.

## இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பின் நிர்வாகிகள் மற்றும், ஒப்பந்த தொழிலாளர்களின் பிரதி நிதிகள் கூட்டம்-டெல்லி

இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பு மாநிலங்களில் உள்ள மின் துறையில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை திரட்டுகின்ற வகையில் ஒப்பந்த தொழிலாளர்களின் பிரதிநிதிகள் கூட்டம் 26.9.2011 அன்று டெல்லியில் நடைபெற உள்ளது. அதில் இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பின் நிர்வாகிகள் தோழர் எஸ்.எஸ். சுப்பிரமணியன், தோழர்.கே.விஜயன், தோழர்.வி.இளங்கோ, தோழர்.டி.ஸ்ரீதர் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

இணையதளம் ஏற்க்கனவே திட்டமிட்டவாறு மத்திய அமைப்புக்கென்று தனியாக இணையதளம் துவங்கப்பட உள்ளது. அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

வாழ்த்துக்களுடன்...

தங்களின் நம்பிக்கையுள்ள,

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.